**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி திங்கள் 04–ம் நாள்

2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20–ம் நாள் புதன்கிழமை

******

**இடைமனு எண். 06/2025–ல் – அசல் வழக்கு எண். 107/2017**

வசந்தா, க/பெ. அமிர்தலிங்கம் .....மனுதாரர்/பிரதிவாதி

...எதிராக...

1. வசந்தா (இறந்தார்)
2. குருமூர்த்தி
3. தேவிகா
4. ராஜலெட்சுமி
5. ராதிகா
6. சிவக்குமார் .... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 11.08.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு E.செல்வராஜ் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மேற்படி நம்பரில் குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை மேற்படி நம்பரில் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–8 விதி 1 A (3) –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.20 17:03:33 +0530

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர், அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கை எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்/பிரதிவாதி மீது, தாவா வழக்கு சொத்தை பொறுத்து சுவாதீனம் மீட்பு பரிகாரத்திற்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் மனுதாரர் ஆஜர் ஆகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சியாடி வருகிறார்.

(ii) மேற்படி நம்பரில் மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் போது மனுவில் கண்டுள்ள ஆவணங்களை குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை. மேற்படி ஆவணங்கள் தற்போது தான் மனுதாரர்/பிரதிவாதிக்கு கிடைத்துள்ளது. எனவே மேற்படி ஆவணங்களை மேற்படி நம்பரில் குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை மேற்படி நம்பரில் தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி மனுதாராரால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. **எதிர்மனுதாரர்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் சுருக்கம்.**

(i) மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. இந்த குறிப்பாணையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட பிற சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கின்றார். அதனை நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டுள்ளார்.

(ii) மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பு இல்லாத ஆவணங்களாகும். இந்த ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட கால தாமதத்திற்கு மனுதாரர் கூறியுள்ள காரணம் சரியல்ல. சரியான காரணங்கள் கூறாமல் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடிக்கு

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.20 17:03:40 +0530

அருகதையாக உள்ளது. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

**5. <u>தீர்வு:</u>**

(i) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் போது மனுவில் கண்டுள்ள ஆவணங்களை மேற்படி நம்பரில் குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், மேற்படி ஆவணங்கள் தற்போது தான் மனுதாரர்/பிரதிவாதிக்கு கிடைத்துள்ளது என்றும், எனவே மேற்படி ஆவணங்களை குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை மேற்படி நம்பரில் தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பு இல்லாத ஆவணங்கள் என்றும், இந்த ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட கால தாமதத்திற்கு மனுதாரர் கூறியுள்ள காரணம் சரியல்ல என்றும், மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

(iii) மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் விசாரணை எந்தவிதத்திலும் பாதிக்கப்படபோவதும் இல்லை,

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.20 17:03:46 +0530

எதிர்மனுதாரர்களுக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.20 17:03:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.20 17:04:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.06/2025–ல்
அசல் வழக்கு எண்.107/2017
நாள்.20.08.2025.